யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைப் பிரசுரம்—11.

உ

## சைவத்திருநெறித்

# தோத்திரத்திரட்டு



1954.

விலை அணா 12.] [சதம் 75.

உ

சிவமயம்

# சைவத்திருநெறித்
# தோத்திரத் திரட்டு

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
தொகுத்தது.

215

இஃது
யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையாரால்
தமது
சைவப்பிரகாச யந்திரசாலையில்
அச்சிடப்பெற்றது.

8-ம் பதிப்பு

ஜயவருஷ புரட்டாதி மீ

1954

(*Copyright Registered*)



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முக வர்கள் நினைவாக

மதுரை காமராஜ் ப ர்துக்கு

அன்புடன் அ

27–

மதுரை காமராசர் பல்கலைக்க
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

# நூன்முகம்

கருணாநிதியாகிய பரமசிவன் "..............நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை, பாட்டே யாகுமாதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கட்டளையிட்டருளி யுள்ளாராதலின், சைவசமயிகளா யுள்ளார்க்கு இறைவனை வாயார வாழ்த்துதல் சிறந்த தொண்டாகும். சைவ மாணுக்கராயுள்ளாரும், ஏனைய சைவாபிமானிகளும், ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம் எம்பிரானுர் கொண்டருளிய மூர்த்தங்களைத் தோத்திரஞ் செய்தற்கு இயைந்ததாக, திருவருளை முன்னிட்டு இந்தத் தோத்திரத்திரட்டு தொகுக்கப்பட்ட தெனலாம். இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், பட்டினத்தடிகள் திருப்பாடல், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, தாயுமானவர் திருப்பாடல், முதலியன முறையே தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், விநாயகக் கடவுள், சிவபெருமான், நடராசர், தக்ஷிணாமூர்த்தி, வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், வீரவாகுதேவர், அரிகரபுத்திரர் (ஐயனுர்), சிவசத்தி, சிவகாமியம்மை, துர்க்கை, இலக்குமி, சரசுவதி, காளி, திருநந்திதேவர் முதலாம் மூர்த்திகட்கும், சமய குரவர்க்கும், சூரியமூர்த்திக்கும், சண்டேசுவரருக்கும் உரிய தோத்திரங்கள் மரபாக வகுக்கப்பெற்றுள்ளன; சுருங்கச் சொல்லுகில் இச் சைவத்திருநெறித் தோத்திரத் திரட்டு பூரணமுடையதென்று சொல்லலாகும். சைவ நன்மக்களா யுள்ளா ரெல்லாரும் இத் தோத்திரத் திரட்டை இனிது பெற்று ஆர்வத்துடன் பாராயணஞ் செய்துதிருவருட் பெரும்பேற்றை அடையவேண்டுமென்பதே தமியேன் மனக்கிடக்கை. ம. வே. தி. ச.









"பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி

ஆழிமிசைக்கன்மிதப்பில்
அணைந்தபிரா னடிபோற்றி

வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி

ஊழிமலி திருவாத
வூர்திருத் தாள்போற்றி"

மதுரை காமராசர் பல்கலை.
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

உ

திருச்சிற்றம்பலம்

* அகத்திய மகாமுனிவர்
திரட்டியருளிய

# தேவாரத் திரட்டு

தேவாரம் நுதலியபொருள்
நேரிசை வெண்பா

குருவருளும் வெண்ணீ றெழுத்தைஞ்சுங் கோயில்
அரனுருவு மென்றலைமே லாக்குந் — திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனு ரெட்டு.

## திருப்பதிகக் கருத்துரை

நிலைமண்டல வாசிரியப்பா

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பறையின் வரலா றாகும்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகும்

---

* அடங்கன்முறையை அநுதினமும் பாராயணஞ் செய்ய வேண்டுமென ஆசைகொண்ட சிவாலயமுனிவர் அங்ஙனஞ் செய்தல் அசாத்தியமெனக் கண்டு வருந்தி, பின் நடராசப் பெருமானுடைய கட்டளைப்படி அகத்தியமகா முனிவரை அடைய, அம்முனிவர் இந்த இருபத்தைந்து தேவாரப் பதிகங்களையும் திரட்டிக் கொடுத்து, இவற்றை நாள்தோறும் பாராயணஞ் செய்தால் அடங்கன்முறை முழுவதையும் பாராயணஞ் செய்ததற்குச் சமமாகும் எனக் கூறியருளினரென்பது வரலாறு.

ஆரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகும்
ஓருரு வரிய பாலை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ளுள
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்று கொன்றிவை மூன்றும்
நந்தலி லநுச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்றும்
நாயனு மடிமைபு நாட்டிய தாகும்
இப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வாரம்
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன் றகவுற வதனாற்
றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகில்
ஓதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருப்பிரமபுரம்; பண்-நட்டபாடை

குருவருள்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (1)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனுப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (2)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (3)

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (4)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூருமிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே (5)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (9)

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்த
வுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (7)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்

றுயரிலங்கும்முலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (8)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானும்
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளிர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (9)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (10)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனர்

### திருவதிகைவீரட்டானம். பண்—கொல்லி

குருவருள்

திருச்சிற்றம்பலம்

கூற்றுயினவாறுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றுயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதும்
தோற்றுதென்வயிற்றினகம்படியே
குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (1)

நெஞ்சம் முமக்கேயிட மாகவைத்தேன்
நினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம் மிதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னை நலிவதனை
நணுகாமற்றுரந்துகரந்துமிடர்
அஞ்சேலுமென்னீர திகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (2)

பணிந்தாரனபாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டுமெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகேளதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (3)

முன்னம்மடியேனறியாமையினான்
முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோ
தலையாயவர்தங்கடனாவதுதான்
அன்னநடையாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (4)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகயம்புகநூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்

வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்
வயிற்ரேடுதுடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (5)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்
தமிழோடிசைபாடன்மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேன்
உன்னுமமென்னுவின்மறந்தறியேன்
உலர்ந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறுசூலைதவிர்த்தருளாய்
அலந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (6)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளு
மொருவர்தலைகாவலிலாமையினல்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்ரல்
வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயிற்றினகம்படியே
பறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (7)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்றுமிலாமையினற்
சலித்தாலொருவர்துணையாருமில்லைச்
சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகம்படியே
கலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன
அலுத்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (8)

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென் றிவற்றை
நணுகாமற்றுரந்துகரந்துமிடீர்
என்போலிகளும்மையினித்தெளியார்
அடியார்படுவதிதுவேயாகில்
அன்பேயமையும் மதிகைக்கெடில
வீரட்டானத்துறையம் மானே. (9)

போர்த்தாயங்கொரானையினீருரிதோல்
புறங்காடரங்காநடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன் றனைமால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்தவது கருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்துமெழுந்தால்
என்வேதனையானவிலக்கியிடாய்
ஆர்த்தார்புனல்சூழ்திகைக்கெடில
வீரட்டானத்துறையம் மானே. (10)

திருச்சிற்றம்பலம்

---

சுந்தரமூர்த்திநாயனர்

திருவெண்ணெய்நல்லூர்: பண்-இந்தளம்

குருவருள்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான் மறவாதேநினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

பாதப்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியா
ஆதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறைபுள்

தண்ணார்மதிசூடீதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆனாயுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்வித்திரிவேனோசெக்கர்வானீர்
ஏற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [டுறையுள்

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. [டுறையுள்

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

### திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம். பண்-காந்தாரம்

பரையின் வரலாறு

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே.

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுஉண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (2)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே (3)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (4)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லாம்

ஆசைகெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான் றிருநீறே. (5)

அருத்தமதாவது நீறு அவலமறுப்பது நீறு
வருந்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே.

எயிலதுவட்டது நீறு இருமைக்குமுள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான் றிருநீறே. (7)

இராவணன்மேலது நீறு எண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந்திருமேனியாலவாயான் றிருநீறே (8)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யது வெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவது நீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான் றிருநீறே (9)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர் கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையது நீறு
அண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான் றிருநீறே. (10)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான் றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

பஞ்சாக்கரத்திருப்பதிகம். பண் - காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்ச லிலாதபோழ்தினும்
நெஞ்சகநைந்து நினைமினுநாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே. (1)

மந்திரநான்மறை யாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பிய செம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே. (2)

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிடர்
ஆனகெடுப்பன வஞ்செழுத்துமே. (3

நல்லவர்தீயரெ னுதுநச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லநமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே. (4)

கொங்கலர்வன்மதன் வாளியைந்தகத்
தங்குளபூதமு மஞ்சவைம்பொழில்
தங்கரவின்பட மஞ்சுந்தம்முடை
அங்கையிலைவிர லஞ்செழுத்துமே. (5)

தும்மலிருமல் தொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்தினும்
இம்மைவினையடர்த் தெய்தும்போழ்தினும்
அம்மையினுந்துணை யஞ்செழுத்துமே. (6)

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறும்
மாடுகொடுப்பன மன்னுமாநடம்
ஆடியுகப்பன வஞ்செழுத்துமே. (7)

வண்டமரோதி மடந்தைபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதித்தபின்னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே. (8)

கார்வணனான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடி செவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே. (9)

புத்தர்சமண்கழுக் கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே. (10)

நற்றமிழ்ஞானசம் பந்தனான்மறை
கற்றவன்காழியர் மன்னனுன்னிய
வற்றமின்மாலையீ ரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவ ரும்பராவரே. (11)

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

### நமச்சிவாயத் திருப்பதிகம். பண் - கௌசிகம்.

### அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னுமை நமச்சி வாயவே. (1)

நம்பு வார்நமர் நாவி னவிற்றினல்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னர்தில கம்முல குக்கெலாம்
நம்ப னுமை நமச்சி வாயவே (2)

நெக்கு ளார்வமி கப்பெருகி நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னுமை நமச்சி வாயவே. (3)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினல்
நியமந் தானினை வார்க்கினி யாநெற்றி
நயன னுமை நமச்சி வாயவே. (4)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. (5)

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. (6)

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. (7)

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாம நமச்சி வாயவே. (8)

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. (9)

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்டவ முதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. (10)

நந்தி நாம நமச்சி வாயவெ னுஞ்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொற்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

———

## திருநாவுக் கரசுநாயனர்

நமச்சிவாயத்திருப்பதிகம். பண் - காந்தாரபஞ்சமம்

அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. (1)

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே. (2)

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழல்
உண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே. (3)

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினுமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே. (4)

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலாம்
அந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. (5)

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லால்
நலமிலனுடொறு நல்குவானலன்

குலமிலராகினுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே. (6)

வீடினுருலகினில் விழுமியதொண்டர்
கூடினாரந்நெறி கூடச்சென்றலும்
ஓடினேனோடிச்சென் றுருவங்காண்டலு
நாடினேனாடிற்று நமச்சிவாயவே. (7)

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. (8)

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
தன்னெறியேசர ணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. (9)

மாப்பிணைதழுவிய மாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. (10

திருச்சிற்றம்பலம்

---

சுந்தரமூர்த்திநாயனார்

திருப்பாண்டிக்கொடுமுடி, பண்—பழம்பஞ்சுரம்

அஞ்செழுத் துண்மை

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற் றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (2)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (3)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (4)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினேன் [ன்
அஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினுய்க்கழிகின்றதெ
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (5)

ஏடுவாளனந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மே
லாடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்
பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (6)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டனன்
நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டி
குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக் [டைக்
விரும்பனேயுனைநான்மறக்கினும்சொல்லுநா [கொடுமுடி
[நமச்சிவாயவே. (7)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்

கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (8)

சாரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாம
பேரெணாயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார் [ணியென்று
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (9)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லை
துன்பமே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருக்ஷேத்திரக்கோவை. பண் — இந்தளம்.

கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

ஆரூர்தில்லையம்பலம்வல்லநல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (1)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
நகலாமுதுகுன் றங்கொடுங்குன் றமும்
கண்ணார்கழுக்குன் றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்பாக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன் றம்பருப்பதம்பேணிநின்றே
யெண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
கடனீந்தலாங்காரணமே. (2)

அட்டானமென்றோதியநாலிரண்டு
மழகன் னுறைகாவனைத்துந்துறைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
குளமூன் றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
மதிக்குமிடமாகியபாழிமூன் றுஞ்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா
யரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (3)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிபூசி
யாறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
யுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே. (4)

ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே. (5)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்செசாலிலாவிடைமாமருது
மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
றவமாமலமாயினதானறுமே. (6)

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராம
முண்டீச்சரம்வாதவூர்வாரணசி
காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையுங்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில் (7)

.......................................
......குலாவுதிங்கட்சடையான்குளிரும்பரிதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூருங் [ணெரித்தா
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோ
ளுறைகோயிலென்றென்றுநீகருதே. (8)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக
னெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சர
நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (9)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடி மருவு
மத்தங்குடிதண் டிருவன்குடியு
மலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தனிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்மினே. (10)

அம்மானையருந்தவமாகிநின்ற
வமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
விம்மாலையீரைந்துமிருநிலத்தி
லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்மடியார்
விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசு நாயனார்

திருக்ஷேத்திரக்கோவை. திருத்தாண்டகம்.

கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (1)

காமராசர் பல்கலை அவ்வை தி.சு. சண்முகம்

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றுன்றேன்றிமாடமாலூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (2)

இடைமருதீங்கோயிராமேச்சர
மின்னம்பரேரிடவையேபப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்செங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (3)

எச்சிலிளமரேமநல்லூர்
இலம்பையங்கோட்டூரிறையான்சேரி
அச்சிறுபாக்கமளப்பூரம்பர்
ஆவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியுமேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (4)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னிலநெல்விக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூர்

இடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
ரெறும்பியூரேராருமேமகூடங்
கடம்பையிளங்கோயிறன்னினுள்ளுங்
கயிலாயநாதனையேகாணலாமே (5)

மண்ணிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (6)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
வேதிகுடிவிசயமங்கைவியலூர்
ஆழியகத்தியான்பள்ளியண்ணாமலை
யாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்த்தண்
காழிகடவூகைக்காரோணத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (7)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூர்
உருத்திரகோடிமறைக்காட்டுள்ளும்
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மீயச்சூர்வைகா
வேதீச்சுரம்விவீசுரம்வெற்றியூரும்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (8)

திண்டீச்சரஞ்சேய்ஞ்ஞலூர்செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டானம்
ஐயாறசோகந்தியாமாத்தூருங்
கண்டியூர்வீரட்டம்கருகாவூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (9)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
தோணிபுரந்துருத்திசோமீச்சரம்
உறையூர்கடலொற்றியூரூற்றத்தூர்
ஓமாம்புலியூரோரேடகத்துங்
கரையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (10)

புலிவலப்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில் பலகண்டாற்றொண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (11)

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்திநாயனார்

ஊர்த்தொகை பண் – பழம்பஞ்சுரம்

கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (1)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவலியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. (2)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (3)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (4)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
யருகற்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே, (5)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பரனே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே, (6)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
ஆனைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
ஊனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே. (7)

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்தியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே. (8)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடி
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே. (9)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

### திருவெழுகூற்றிருக்கை

### சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

ஓருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல்பூதலம்
ஒன்றியவிரிசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவனாகிநின்றனை
ஓரானீழலொண்கழலிரண்டு

முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றாகக்கோட்டினை
இருநதியரவமோடொருமதிசூடினை
ஒருதாளீரயின்மூவிலைச்சூல
நாற்கான்மான்மறியைந்தலையரவம்
ஏந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
ஒருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
யைம்புலனாலாமந்தக்கரணம்
முக்குணமிருவளியொருங்கியவானோர்
ஏத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரப்பேணினை
யறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
யிகலிபமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை
ஒருமலையெடுத்தவிருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை

ஐயுறுமமணருமறுவகைத்தேரரும்
ஊழியுமுணராக்காழியமர்ந்தனை
எச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
ஆறுபதமுமைந்தமர்கல்வியும்
மறைமுதலுணர்ந்த
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
இருமையினொருமையுமொருமையின்பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியும்
அனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

திருக்கடவூர் மயானம். பண் – காந்தாரம்.

சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
எரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. (1)

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனென்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவார்
அங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (2)

சுடலிடபமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. (3)

இறைவின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைவின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைவின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைவின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. (4)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகடுலங்கக்
கள்ளநகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (5)

பொன்றுதுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தார்
ஒன்றுவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றுவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றாள்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே, (6)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையார்
ஆசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (7)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. (8)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்

திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே, (9)

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (10)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனார்

### கோயிற்றிருவிருத்தம் பண் – கொல்லி

### சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னுள்
ஆளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற் [னே.
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதளன்
உருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (2)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுதும்
அடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்

பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவன்
உடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. ()

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
அச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. 4)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான் [னே
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கும்
ஏனத்தெயிறுகண்டாற்பின்னைக் கண்கொண்டுகாண்பதென்னே.

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. ()

சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கநங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே,

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (9)

தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
அரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனர்

### திருப்பூவணம் — திருத்தாண்டகம்

### சிவனுருவம்

திருச்சிற்றம் பலம்

வடியேறு திரிசூலம் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. (1)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊனாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றூர் தம்மேற்
சேனாக வரைவில்லா லெரித்த றோன்றுஞ்
செத்தவர்த மெலும்பினாற் செறியச் செய்த
பூணாணு மரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. (2)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றும்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்றும்
அல்லாதகாலனைமுன்னடர்த்தல்தோன்றும்
ஐவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணுய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (3)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்றும்
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்றும்
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்றும்
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்றும்
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (4)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்றும்
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்றும்
இயல்பாகவிடுபிச்சையேற்றறோன்றும்
இருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரவாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (5)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்றும்

ஓராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (6)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தரேன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தரேன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (7)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்றும்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்றும்
நெற்றிமேற்கண்தோன்றும்பெற்றந்தோன்றும்
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்றும்
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (8)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்றும்
அணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்றும்
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றும்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (9)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தருளன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றும்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே (10)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்திநாயனுர்

திருக்கடவூர் மயானம் பண் - பழம்பஞ்சுரம்.

சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்கும்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (1)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார் நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (2)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும் பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (3)

நறைசேர்மலரைங்கணையானை நயனத்தியாற்பொடிசெய்த
விறையாரா வாரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (4)

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (5)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே, (6)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேராரரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினார்
ஊர்தானவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (7)

வாடாமுலையாடன்னோடுமகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து

காடாவண்ணஞ்செருச்செய்துவாவநாழிகிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (8)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியறுப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பரரிதனக்குவானஞ்சுகப்பரறமுரைப்பர்
ஏழைதலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (9)

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

திருவாழ்கொளிபுத்தூர்; பண்-தக்கராகம்

### திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி [தூர்க்
வடியுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம். (1)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தை
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ [யம்
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம் (2)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி [புத்தூர்த்
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளி
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (3)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கை தாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர் தூவிக்கறைமிடற்றானடிகாண்போம், (4)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழை
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி [யோடு
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
இனமலரேய்ந்தன தூவியெம்பெருமானடிசேர்வோம் (5)

அளைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சிக்
களைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்று [தூர்த்
வளையொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்
தளையவிழ்மாமலர் தூவித்தலைவனதாளிணைசார்வோம். (6)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்துவழிதலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபலகூறி [தூர்
மடனெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்
தடமலராயின தூவித்தலைவனதாணிழல்சார்வோம். (7)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து
அயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
சயவிரிமாமலர் தூவித்தாழ்சடையானடிசார்வோம். (8)

கரியவனான்முகன்கைதொழுதேத்தக்கானலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியூரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயின தூவிவிகிர்தனசேவடிசேர்வோம், (9)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினார்புறங்
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி [கூற

வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்
தொண்டர்கண்மாமலர்தூவத்தோன்றநின்றுனடிசேர் [தூர்த்
வோம். (10)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன் [தூர்ச்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே, (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனர்

திருவதிகைவீரட்டானம். திருவடித்திருத்தாண்டகம்.

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அரவணையான்சிந்தித்தரற்றும்மடி
யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணுமடி
பரவுவார்பாவம்பறைக்கும்மடி
பதினெண்கணங்களும்பாடும்மடி
விரவுநீர்த்தெண்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (1)

கொடுவினையாரென்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்கும்மடி
படுமுழவம்பாணிபயிற்றும்மடி
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதும்மடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி (2)

வைதெழுவார்காமம்பொய்போகாவடி
வஞ்சவலைப்பாடொன் றில்லாவடி
கைதொழு துநாமேத்திக்கா ணும்மடி
கணக் குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழு.துநாமேத்தியாட்டும்மடி
நீள்விசுப் பையூட றுத் துநின் றவடி
தெய்வப்புன ற்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (3)

அருப்பித்த செய்ஞ்ஞாயிறேய்க்கும் மடி
யழகெழுதலா காவருட்சேவடி
சுரும்பித்தவண் டினங்கள்சூழ்ந்தவடி
சோமனையுங்காலனையுங்காய்ந்தவடி
பெரும்பித்தர்கூடிப்பிதற் றும்மடி
பிழைத்தார்பிழைப்ப றியவல்லவடி
திருந்து நீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (4)

ஒருகாலத்தொன் றாகிநின் றவடி
யூழிதோ றூழியுயர்ந்தவடி
பொருகழ லும்பல்சிலம்பும்மார்க்கும்மடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
யிருநிலத்தாரின் புற் றங்கேத்தும்மடி
யின் புற்றிட்ட பூவேறும் மடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (5)

திருமகட்குச்செந்தாமரையாமடி
சிறந்தவர்க்குத்தேனாய்விளைக்கும்மடி
பொருளவர்க்குப்பொன் னுரையாய்நின் றவடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி

யுருவிரண்டுமொன்றேடொன்றெவ்வாவடி
யுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (6)

உரைமாலையெல்லாமுடையவடி
யுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கிவாழ்த்தும்மடி
யரைமாத்திரையிலடங்கும்மடி
யகலமளக்கிற்பாரில்லாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி
கமழ்வீரட்டானக்காபாலியடி. (7)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடி
நடுவாயுலகநாடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடி
தீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவும்மடி
மந்திரமுந்தந்திரமுமாயவடி
யெறிகெடிலநாடர்பெருமானடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (8)

அணியனவுஞ்சேயனவுமல்லாவடி
யடியார்கட்காரமுதமாயவடி
பணிபவர்க்குப்பாங்காகவல்லவடி
பற்றற்றார்பற்றும்பவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடி
மருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடுதண்கெடிலநாடன்னடி
தகைசார்வீரட்டத்தலைவன்னடி. (9)

அந்தாமரைப்போதலர்ந்தவடி
அரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறுடும்மடி
வீரட்டங்காதல்விமலன்னடி. (10)

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்திநாயனார்

திருப்புன்கூர், பண் - தக்கேசி.

### திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
அவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றன்னாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வண்மைகண்டடியேன்
எந்தைநீயெனை நமன்றமர்நலியில்
இவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (1)

வையகமுற்றுமாமழைமறந்து
வயலினீரிலைமாநிலந்தருகோம்
உய்யக்கொள்கமற்றெங்களையென்ன
வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்

பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (2)

ஏதநன்னிலமீரறுவேலி
யேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்
சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (3)

நற்றமிழ்வல்லஞானசம்பந்தன்
நாவினுக்கரையனுளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (4)

கோலமால்வரைமத்தெனநாட்டிக்
கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலநஞ்சுகண்டவர்மிகவிரிய
வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
கண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (5)

இயக்கர்கின்னரர்யமனெடுவருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன் றின் றிநின் றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திகைப்பொன் றின் றிநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (6)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளானிழற்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன் றுபாசுபதங்கொடுத்
தருளினுய்பண்டுபகீரதன்வேண்ட
வார்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின் றன் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (7)

மூவெயில்செற்றஞான் றுய்ந்தமூவரில்
இருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென் றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (8)

அறிவினுன்மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்

குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (9)

கம்பமால்களிற்றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்து
அன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே. (10)

திருச்சிற்றம்பலம்

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருப்பூந்தராய். பண் – காந்தாரபஞ்சமம்.

அருச்சவன

திருச்சிற்றம்பலம்

பந்துசேர்விரலாள் பவளத்துவர்வாயினாள் பனிமா
மதிபோன்முகத், தந்தமில்புகழாண் மலைமாதொடுமாதிப்
பிரான், வந்துசேர்விடம்வானவரெத்திசையும்நிறைந்து
வலஞ்செய்து மாமலர், புந்திசெய்திறைஞ்சிப் பொழி
பூந்தராய் போற்றுதுமே. (1)

காவியங்கருங் கண்ணினாள் கனித்தொண்டை வாய்க்
கதிர்முத்தநல்ல வெண்ணகைத், தூவியம்பெடை யன்ன
நடைச்சுரிமென்குழலாள், தேவியுந்திருமேனியோர்பாக
மாயொன்றிரண்டொரு மூன்றொடுசேர்பதி, பூவிலந்தண
னொப்பவர்பூந்தராய் போற்றுதுமே. (2)

பையராவரு மல்குன்மெல்லியல் பஞ்சின் னேரடி வஞ்சிகொ ணுண்ணிடைத், தையலாளொருபா லுடை யெம்மிறைசாரு மிடஞ், செய்யெலாங் கழுநீர்கமலம் மலர்த்தேறலூ றலிற் சேறுலராதநற், பொய்யிலா மறை யோர்பயில்பூந் தராய் போற்றுதுமே. (3)

முள்ளிநாண்முகை மொட்டியல் கோங்கி னரும்பு தேன்கொள் குரும்பை மூவாமருந், துள்ளியன்றபைம் பொற்கலசத்தியலொத்தமுலை, வெள்ளிமால்வரையன்ன தோர்மேனியின் மேவினார் பதிவீமருதண்பொழிற், புள் ளினந்துயின் மல்கியபூந்தராய் போற்றுதுமே. (4)

பண்ணியன்றெழுமென்மொழி யாள்பகர் கோதை யேர்திகழ்பைந்தளிர்மேனியோர், பெண்ணியன்றமொய்ம் பிற் பெருமாற்கிடம் பெய்வளையார், கண்ணியன்றெழு காவிச் செழுங்கருநீல மல்கியகாமருவாவிநற், புண்ணிய ருறையும்பதி பூந்தராய்போற்றுதுமே. (5)

வாணிலா மதிபோ னுதலாண் மடமாழை யொண் கணாள் வண்டரளநகை, பாணிலாவிய வின்னிசை யார் மொழிப்பாவையொடுஞ், சேணிலாத் திகழ்செஞ்சடை யெம்மண்ணல் சேர்வது சிகரப்பெருங் கோயில்சூழ், போணிலா நுழையும்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. ()

காருலாவிய வார்குழலாள்கயற் கண்ணினாள்புயற் காலொளி மின்னிடை, வாருலாவிய மென்முலையாண் மலை மாதுடனாய், நீருலாவிய சென்னியன் மன்னிநிகரு நாமமுன்னூன்கு நிகழ்பதி, போருலா வெயில் சூழ் பொழிற் பூந்தராய் போற்றுதுமே. (7)

காசைசேர்குழலாள்கயலேர் தடங்கண்ணிகாம்பன தோட்கதிர்மென்முலைத், தேசுசேர்மலைமாதமருந் திருமார்

பகலத், தீசன்மேவுமிருங்கயிலை யெடுத்தானை யன்றடர்த் தானிணைச் சேவடி, பூசைசெய்பவர் சேர்பொழிற் பூந் தராய் போற்றுதுமே (8)

கொங்குசேர்குழலாணிழல்வெண்ணகைக்கோவ்வை வாய்க்கொடியேரிடையாளுமை, பங்குசேர்திருமார்புடை யார்படர்தீ யுருவாய், மங்குல்வண்ணனு மாமலரோனு மயங்கநீண்டவர் வான்மிசை வந்தெழு, பொங்குநீரின் மிதந்தநற் பூந்தராய் போற்றுதுமே (9)

கலவமாமயி லாரியலாள் கரும்பன்ன மென்மொழி யாள் கதிர்வாணுதற், குலவுபூங்குழலாளுமைகூறனை வேறுரையால், அலவைசொல்லுவார் தேரமணாதர்க ளாக்கினான்றனை நண்ணலுநல்குநற், புலவர் தாம்புகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதுமே. (10)

தேம்பனுண்ணிடையாள் செழுஞ்சேலனகண்ணியோ டண்ணல்சேர்விடந்தேனமர், பூம்பொழிறிகழ்பொற்பதி பூந்தராய்போற்றுதுமென், றோம்புதன் மையன் முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்த னெண்டமிழ் மாலைகொண், டாம்படியிவை யேத்தவல்லார்க் கடையாவினையே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசுநாயனார்

### ஸ்ரீ கயிலாயம் — திருத்தாண்டகம்

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத் தொலியே போற்றி

யாற்ருகி யங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேத மாஞய் போற்றி
காற்ருகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலேமலே யானே போற்றி போற்றி; (1)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று முகந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலேமலே யானே போற்றி போற்றி. (2)

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
யுருவாகி யென்னேப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலேமலே யானே போற்றி போற்றி (3)

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
யூனத்தை நீக்கு முடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவஞய் நின்ருய் போற்றி
கானத்தி யாட லுகந்தாய் போற்றி
கயிலேமலே யானே போற்றி போற்றி. (4)

ஊராகி நின்ற வுலகே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி. (5)

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி. (6)

பண்ணினிசை யாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
யெண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி. (7)

இமையா துயிரா திருந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
யூழியே ழான வொருவா போற்றி

அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
யாதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி. (8)

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
யாவா வடியேனுக் கெல்லாம் போற்றி
யல்லலறிய வலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றிபோற்றி, (9)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீளவகல முடையாய் போற்றி
யடியு முடியு மிகலிப் போற்றி
யங்கொன் யறியாமை நின்றாய்போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய்போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றிபோற்றி, (10)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
யோதாதேவேத முணர்ந்தாய் போற்றி
யெண்ணா விலங்கைக்கோன் றன்னைப் போற்றி
யிறைவிரலால் வைத்துகந்த வீசாபோற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டே யென்சிந்தை புகுந்தாய்போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றிபோற்றி. (11)

சுந்தரமூர்த்திநாயனுர்

திருக்கழுக்குன்றம் பண் - நட்டபாடை

அருச்சவன

திருச்சிற்றம்பலம்

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினேடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (1)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (2)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியால்
ஆளுநம்மவினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே. (3)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்மதமூன்றுடைக்
களிறினேடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (4)

புலைகடீரத்தொழுமின்புன்சடைப்புண்ணியன்
இலைகொள்சூலப்படையனெந்தைபிரானிடம்
மலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே. (5)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலும்மிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே. (6)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே. (7)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே. (8)

பிழைகடீரத்தொழுமின்பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையும்மிடம்
மழைகொள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே. (9)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லில்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. ()

திருச்சிற்றம்பலம்

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்

கோளறு திருப்பதிகம் பண் – பியந்தைக்காந்தாரம்

அடிமை

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுன்

ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
யாசறு நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேன்
முருகலர் கொன்றை திங்கண் முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (3)

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுண நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்ட னெந்தை மடவாட னோடு
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே (5)

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர்
மடவாட னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த வதனாற்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
யாளரி நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும்
வினையான வந்து நலியா
வப்படி நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (7)

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாட னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்

ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனாற்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மை திடமே
யத்தகு நல்லநல்ல வவை நல்லநல்ல
வடியா ரவர்க்கு மிகவே (10)

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
யானசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வ ராணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனர்

### திருவாரூர்த் திருவிருத்தம்; பண் – கொல்லி

### அடிமை

திருச்சிற்றம்பலம்

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்திருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே, (1)

மற்றிடமின்றிமனைதுறந்தல்லுணுவல்லமணர்
சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொலோ
விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்ப் [யமே.
புற்றிடங்கொண்டான்றன்றொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

ஒருவடிவின்றிநின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொலோ
செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலட்டானன்செங்கட் [யமே.
பொருவிடையானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்துமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (4)

அருந்தும்பொழுதுரையாடாவமணர்திறமகன்று
வருந்திநினைந்தரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொலோ
திருந்தியமாமதிலாரூர்த்திருமூலட்டானனுக்குப் [யமே.
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

வீங்கியதோள்களுந்தாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடர்முன்னேநமக்குண்டுகொலோ

தேங்கமழ்சோலைத்தென்னூருர்த்திருமூலட்டானன்செய்ய
பூங்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (6)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன் றன்னருள் பெற்றேற்குமுண்டுகொலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலட்டானனெங்கள் [யமே.
புண்ணியன் றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

கரப்பர்கண்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்னுங்குண்டர்
உரைப்பனகேளாதிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
திருப்பொலியாரூர்த்திருமூலட்டானன்றிருக்கயிலைப் [யமே.
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
ஐயனணிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப் [யமே.
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்திநாயனார்

### திருத்தொண்டத்தொகை: பண் - கொல்லிக்கௌவாணம்

அடிமை

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
 திருநீல கண்டத்துக் குயவனூர்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
 இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந் தாரமர்நீ திக்கடியேன்
ஆரூர ளூரூரி லம்மானுக் காளே. (1)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (2)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினாலெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (3)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (4)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்

நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
　　ஞட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
　　ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (5)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
　　மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
　　செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
　　கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
　　ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (6)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
　　பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
　　விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
　　கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
　　ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (7)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
　　கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
　　நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
　　தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
　　ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (8)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
　　காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
　　மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்

புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (10)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

அகத்தியமுனிவர் திரட்டியருளிய தேவாரத்திரட்டு முற்றிற்று.

---

# திருவாசகம்

நூற்சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்ல லறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னனேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி யெந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப் பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்ப னியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர் [யாய்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த வன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்தமலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே [தின்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச் சொல்லாதநுண் ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

---

# திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே

கொள்ளேன்புரந்தரன் மாலயன்வாழ்வுகுடிகெடினும்
நள்ளேன்நினதடியாரொடல்லானரகம்புகினும்
எள்ளேன்றிருவருளாலேயிருக்கப்பெறினிறைவா
உள்ளேன்பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே. (3)

தவமேபுரிந்திலன் தண்மலரிட்டுமுட்டாதிறைஞ்சேன்
அவமேபிறந்தஅருவினையேனுனக்கன்பருள்ளாஞ்
சிவமேபெறுந்திருவெய்திற்றிலேனின்றிருவடிக்காம்
பவமேயருளுகண்டாயடியேற்கெம்பரம்பரனே. (4)

புகவேதகேனுனக்கன்பருள்யானென்பொல்லாமணியே
தகவேயெனையுனக்காட்கொண்டதன்மையிப்புன்மையரை
மிகவேயுயர்த்திவிண்ணோரைப்பணித்தியண்ணவமுதே
நகவேதகுமெம்பிரானென்னைநீசெய்தநாடகமே. (5)

நாடகத்தாலுன்னடியார்போனடித்துநானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான்மிகப்பெரிதும்விரைகின்றேன்
ஆடகச்சீர்மணிக்குன்றேயிடையறுஅன்புனக்கென்
னூடகத்தேநின்றுருகத்தந்தருளெம்முடையானே. (6)

வாழ்கின்றாய்வாழாதநெஞ்சமேவல்வினைப்பட்
டாழ்கின்றாய்யாழாமற்காப்பானையேத்தாதே
சூழ்கின்றாய்கேடுனக்குச்சொல்கின்றேன்பல்காலும்
வீழ்கின்றாய்நீயவலக்கடலாயவெள்ளத்தே. (7)

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (8)

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி யாடு வோமே. (9)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## நீத்தல் விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

கடையவனேனைக் கருணையினாற்கலந் தாண்டுகொண்ட
விடையவனேவிட் டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்
உடையவனேமன் னுமுத்தரகோசமங்கைக்கரசே [ரேல்
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே.

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன் னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே. (12)

ஏசினும்யா னுன்னையேத்தினு மென்பிழைக்கே தழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பின்
தேசுடைய யென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினஆல மூண்டாயமுதுண்ணக்கடையவனே. (13)

திருச்சிற்றம்பலம்

---

## திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். (14)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். (15)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய் ()

ஒண்ணித் திலநகையா யின்னும் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (17)

மாலறியா நான்முகனுங் காணுமலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (18)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே
போனதிசை பகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோரெம்பாவாய். ()

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (20)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (21)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (22)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன் றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்

ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்ரு ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (23)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரெனனக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீயாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யுபவகை யெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (24)

ஆர்த்த பிறவித் துயர்கெட நா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தை யும்பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தியிருஞ் சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (25)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கையப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
 கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
 வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
 ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
 பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (27)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
 சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகாலோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
 பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
 ஆரொருவரிவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
 ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
 என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
 பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
 தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னியவ ளமக்கு முன்சுரக்கு மின்னருளே
 என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். ()

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
 எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
 இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். ()

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.(32)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (33)

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே (34)

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (35)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. (36)

காசணி மின்க ளுலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (37)

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (38)

உலக்கைபல வோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே. (39)

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்பவார்ப்ப

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (30)

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு மூண்டடந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆட்பொற் சுண்ண மிடித்துநாமே. (41)

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடி
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (42)

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாட
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாவாட
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (43)

மாடு நகைவா ணிலாவெறிப்ப
    வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
    பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
    சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
    காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (44)

மையமர் கண்டனை வானநாடர்
    மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
    அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
    போதரிக் கண்ணிணைப் பொறறொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
    பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (45)

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
    வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
    எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
    தமைய னெம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
    பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே (46)

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
    தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
    சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்

கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (47)

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (48)

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (49)

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (50)

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றுடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே (51)

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றுடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே. (52)

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 53)

திருச்சிற்றம்பலம்

## அன்னைப்பத்து

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனா ரன்னே யென்னும். (54,

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னிய ரன்னே யென்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே யென்னும். (55)

---

## திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (56)

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. (57)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (58)

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (59)

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (60)

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (61)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் திருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (62)

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (63)

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (64)

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே (65)

திருச்சிற்றம்பலம்

---

## கோயின்மூத்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.()

முன்னின்றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின்றேவல் செய்கின்றேன் பிற்பட்டொழிந்தேன் பெம்மா
என்னின்றருளி வரநின்று போந்திடென்னா விடிலடியார் [னே
உன்னின் றிவனாரென்னாரோ பொன்னம்பலக்கூத் துகந்தானே.

உகந்தானேயன்புடையடிமைக் குருகாவுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்னாரோ
மகந்தான்செய்து வழிவந்தார்வாழவாழ்ந்தா யடியேற்குன் [லே.
முகந்தான்றாராவிடின்முடிவேன் பொன்னம்பலத்தெம் முழுமுத

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ வென்
றழுமதுவேயன்றிமற்றென்செய்கேன் பொன்னம்பலத்தரைசே.

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சிகொடுத் துன்னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. (70)

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்தானும் பேணு நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. (71)

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே.

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப், பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா, மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வாவென்றுன், தெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. (73)

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிரு வார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந், தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே, நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. (74)

நல்கா தொழியா னமக்கென்றுன் னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா னினைந் துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. (75)

திருச்சிற்றம்பலம்

---

## கோயிற் றிருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்

தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப் பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை அன்பே. (76)

அன்பினு லடியே னுவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. (77)

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே. (78)

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. (79)

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. (80)

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகால்
ஆயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. (81)

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே. (82)

பார்பதம் அண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்

சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதி. (83)

சோதியாய்த் தோன்று முருவமே யருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே யந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே. (84)

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே. (85)

திருச்சிற்றம்பலம்

---

## செத்திலாப் பத்து

சிவானந்தம் அளவறுக்கொணுமை

திருச்சிற்றம்பலம்

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதுமல ர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்

ஐயனே யரசே யருட்பெருங் கடலே
யத்த னேயயன் மாற்கறி யொண்ணுச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (86)

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணு
மன்ன என்னேயோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினுய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (87)

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னுல்நடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேயலை நீர் விட முண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (88)

அன்ப ராகிமற் றருந்தவ முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (89)

ஆட்டுத் தேவர் தம்விதி யொழித் தன்பால்
ஐயனே யென்றுன் னருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரு நாடரும் பொருளே
நாத னேயுன்னைப் பிரிவுறு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (90)

அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே (91)

மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (92)

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்

யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (93)

ஞால மிந்திர னுன்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாயங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலு நீலமு நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (94)

அளித்து வந்தெனக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. (95)

திருச்சிற்றம்பலம்

---

## அடைக்கலப்பத்து

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே. (96)

வெறுப்பன வேசெய்யுமென் சிறுமையைநின் பெருமையினுற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (97)

பெரும்பெரு மானென் பிறவியைவே ரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோனெடு மாலறி யாமனின்ற
அரும்பெரு மானுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (98)

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்திநின் கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்க ளேறினர் வான்யா னிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (99)

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (100)

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (101)

மின்கணி னார்நுடங் குமிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கண னாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே யமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே யுடையா யடியேனுன் னடைக்கலமே. (102)

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே, (103)

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக் கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும்
அறிவறி யேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (104)

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக் கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (105)

திருச்சிற்றம்பலம்

---

## திருக்கழுக்குன்றப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பிணக்கி லாதபெருந் துறைப்பெருமானுன் னாமங்கள் பேசுவார்க், கிணக்கி லாததோ ரின்ப மேவருந் துன்பமே துடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்துமேல் விளையாம லென்வினையொத்தபின், கணக்கி லாத்திருக் கோல நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே (106)

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப்பெரும் பித்தனே, சட்ட நேர்பட வந்திலாத சழக்க னேனுனைச் சார்ந்திலேன், சிட்டனேசிவ லோகனேசிறு நாயி னுங்கடை யாயவெங், கட்டனேனையுமாட் கொள்வான்வந்து காட்டி னாய்கழுக்குன்றிலே.

## குழைத்தபத்து

குழைத்தாற் பண்டைக் கொடுவினை நோய்காவா யுடையாய் கொடுவினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதா னுமையாள் கணவா வெனையாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண் டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென், றழைத்தா லருளா தொழிவதே யம்மானே யுன் னடியேற்கே. (108)

அழகே புரிந்திட் டடிநாயே னரற்றுகின்றே னுடையானே, திகழா நின்றதிருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய், புகழே பெரிய பதமெனக்குப் புராண நீ தந்தருளாதே, குழகா கோல மறையோனே கோனே யென்னைக் குழைத்தாயே. ()

## அச்சப்பத்து

புற்றில்வா ளரவுமஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. (110)

கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்றமஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்தமாட்டா
ஆணலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. (111)

## திருவெசறவு

நானே யோதவஞ் செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாருமுயிர் வாழ்க்கை பொறுத்தன்றே வெறுத்திடவே. (112)

## திருப்புலம்பல்

பூங்கமலத் தயனொடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரு ருடையானே அடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே (113)

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனுன்
உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே. (114)

உற்றாரையான் வேண்டேனூர் வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. (115)

## திருப்படையெழுச்சி

ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்

ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே. (116)

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே. (117)

திருச்சிற்றம்பலம்

---

# திருப்படையாட்சி

## சீவோபாதியொழிதல்

திருச்சிற்றம்பலம்

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கள்தம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. (118)

ஒன்றினொடொன்றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பறுமாகா
உன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே [தே
கன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகாதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்துறுமாகாதே
நன்றிதுதீதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
என்றுமென்னன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
ஏறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே.

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
அந்தமிலாதஅகண்டமுநம்முளகப்படுமாகாதே
ஆதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே

செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்றிருமேனிதிளைப்பனவாகாதே
இந்திரஞாலஇடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
என்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே. (120)

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
எல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே
மன்னியஅன்பரிலென்பணிமுந்துறவைகுவதாகாதே
மாமறையும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
இன்னியற்செங்கழுநீர்மலரென்றலையெய்துவதாகாதே
என்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே.

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவரும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செயும்மடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேரறியாதவனேகபவங்கள்பிழைத்தனவாகாதே
எண்ணிலியாகியசித்திகள்வந்தெனையெய்துவதாகாதே
என்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. ()

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
இன்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
என்னைமுனாளுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே.

சொல்லியலாதெழுதூமணியோசைசுவைதருமாகாதே
துண்ணெனவென்னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகா
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே [தே
பண்டறியாதபரானுபவங்கள்பரந்தெழுமாகாதே

வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
விண்ணவரும்மறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
எல்லையிலாதனஎண்குணமானவையெய்திடுமாகாதே
இந்துசிகாமணியெங்களையாளஎழுந்தருளப்பெறிலே. (124)

சங்குதிரண்டுமுரண்டெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கள்நம்மோடுசலித்திடுமாகாதே
அங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
ஆசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கள்தெரிந்திடுமாகாதே
எங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
ஈறறியாமறையோனெனையாளஎழுந்தருளப்பெறிலே. ()

திருச்சிற்றம்பலம்

---

## அச்சோப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (126)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே. (127)

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (128)

திருச்சிற்றம்பலம்

---

# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென்கண் குளிர்ந்தனவே. (1)

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற் றம்பலமே. (2)

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகண் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லிய லிவளே. (3)

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மிண்டுமனத்தவர்போமின்கண்
மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசர்க்
காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோ
ரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றே
பல்லாண்டுகூறுதுமே. (1)

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்த
தூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்
சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரள்மேரு
விடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. (2)

தாதையைத்தாளறவீசியசண்டிக்கு
மண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்
போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்
தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கே
பல்லாண்டுகூறுதுமே. (3)

திருச்சிற்றம்பலம்

---

# திருப்புராணம்

## விநாயகர்

திருச்சிற்றம்பலம்

திகடசக்கரச்செம் முகமைந்துளான்
சகடசக்கரத்தாமரை நாயகன்
அகடசக்கரவின் மணியாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம். (1)

வானுலகுமண் ணுலகும்வாழுமறைவாழப்
பான்மைதருசெய்யதமிழ்பார்மிசைவிளங்க
ஞானமதவைந்துகரமூன் றுவிழிநால்வா
யானைமுகனைப்பரவியஞ்சலிசெய்கிற்பாம். (2)

மலரயனுந்திருமாலுங்காணுமைமதிமயங்கப் [யார்
புலிமுனியும்பதஞ்சலியுங்கண்டுதொழப்புரிசடை
குலவுநடந்தருந்தில்லைக்குடதிசைக்கோபுரவாயில்
நிலவியகற்பகக்கன்றினிறைமலர்த்தாளிணைபோற்றி.

திருவுங்கல்வியுஞ்சீருந்தழைக்கவுங்
கருணைபூக்கவுந்தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம்பழுக்கவும்
பெருகுமாழத்துப்பிள்ளையைப்பேணுவாம். (4)

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா
யிருப்பானை யுரக வேந்தன்
தாங்குநெடுநிலத்தானைமுகத்தானை
வதைத்தானைச்சயிலமானைப்
பாங்குவைத்துமழுத்தானைபரித்தான்றந்
தளித்தானைப் பசும்பொற் றேட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து
கரத்தானைப் போற்றல் செய்வாம். (5)

## சிவபெருமான்

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுறு
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபணிக்கொடும்பூணுஞ்
செக்கருறுமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான். (6)

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம். (7)

பிறப்பதுமிறப்பதும்பெயருஞ்செய்கையு
மறப்பதுநினைப்பதும்வடிவம்யாவையுந்
துறப்பதுமின்மையும்பிறவுஞ்சூழ்கலாச்
சிறப்புடையரனடிசென்னிசேர்த்துவாம். (8)

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின் [தில்
மன்னுதிருத்தொண்டனூர்வணங்கிமகிழ்ந்தெழும்பொழு
உன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான். (9)

## நடராஜர்

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. ()

இதந்தருமடந்தையொடிசைந்துயிருடம்புபோல்
விதம்படுலகங்களின்விரிந்தொளிவிளங்குவார்
மதங்கமொடுதுந்துபிவளங்கெழமுழங்கவே
சிதம்பரநடம்பயில்செழுங்கழலிறைஞ்சுவாம். (11)

தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின்புடையமர்ந்துநான்மறையா றங்கமுதற்
கற்றகேள்வி
வல்லாளர்நால்வருக்கும்வாக்கிறந்தபூரணமாய்
மறைக்கப்பாலாய்
எல்லாமாயல்லவுமாயிருந்ததனையிருந்தபடி
யிருந்துகாட்டிச்
சொல்லாமற்சொன்னவரைநினையாமல்நினைந்துபவத்
தொடக்கைவெல்வாம். (12)

மும்மலம்வேறுபட்டொழியமொய்த்துயிர்
அம்மலர்த்தாள்நிழலடங்குமுண்மையைக்
கைம்மலர்க்காட்சியிற்கதுவநல்கிய
செம்மலையலதுளஞ்சிந்தியாதரோ. (13)

வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்கை யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். (14)

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம். ()

உலகமளித்தல்சுதந்திரமன்
றுவணமுயர்த்தோற்கெனவவன்சேய்
இலகுமுருவம்பொடித்தவன்பா
லெழுந்துபடைப்புஞ்சுதந்திரமன்

றலர்மெல்லணையார்க்கெனவவனை
யரங்கத்திசைமாமுகனுக்கிப்
பலரும்வெருவப்பொழிநெய்த்தோர்ப்
*பயிக்கப்புகுந்தோன்பதம்பணிவாம். (16)

வீரபத்திரக்கடவுள்

அந்திவான்பொருமேனியன்கறைமிடறணிந்த
வெந்தைதன்வடிவாயவனுதல்விழியிடையே
வந்துதோன்றியேமூன்னுறநின்றனன்மாதோ
முந்துவீரபத்திரனெனுந்திறலுடைமுதல்வன். (17)

அடைந்தவியுண்டிடுமமரர்யாவரும்
முடிந்திடவெருவியேமுனிவர்வேதியர்
உடைந்திடமாமகமொடியத்தக்கனைத்
தடிந்திடுசேவகன்சரணம்போற்றுவாம். (18)

சுப்பிரமணியக்கடவுள்

மூண்டகமலர்ந்ததன்னமூவிருமுகமுங்கண்ணுங்
குண்டலநிரையுஞ்செம்பொன்மவுலியுங்கோலமார்பும்
எண்டருகரமீராறுமிலங்கெழிற்படைகள்யாவுந் [டான்.
தண்டையுஞ்சிலம்புமார்க்குஞ்சரணமூந்தெரியக்கண்

மூவிருமுகங்கள்போற்றிமுகப்பொழிகருணைபோற்றி
ஏவருந்துதிக்கநின்றவிராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேள்மலரடிபோற்றியன்னுன் [றி.
சேவலும்மயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்

ஆறிருதடந்தோள்வாழ்கவறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்கக்குக்குடம்வாழ்கச்செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்கவாழ்கசீரடியரெல்லாம். (21)

---

* பயிக்கம் – பிச்சை.

புன்னெறியதனிற்செல்லும்போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச்செய்துநவையறுகாட்சிநல்கி
என்னையுமடியனுக்கியிருவினை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள்வள்ளல்பாதபங்கையங்கள்போற்றி.

பன்னிருகரத்தாய்போற்றிபசும்பொன்மாமயிலாய்போற்
முன்னியகருணையாறுமுகப்பரம்பொருளேபோற்றி [றி
கன்னியரிருவர்நீங்காக்கருணைவாரிதியேபோற்றி
என்னிருகண்ணேகண்ணுளிருக்குமாமணியேபோற்றி.()

தெய்வயானையம்மை

வார்கொண்ட கொங்கையெனுங் கோடுதன்னல்
வடிவேலர் பன்னிருதோள் வரையைப் பாய்ந்து
தார்கொண்ட கடம்பதனை யுழக்கியோகத்
தண்பரவை படிந்திறைவர் தடங்கண் வண்டின்
போர் கொண்ட விழிக்கருணை மதத்தை யூற்றிப்
பொருபடையா யெம்வினையைப் பொடித்து நாளும்
பார்கொண்ட பரங்கிரிவாழ் தெய்வ யானை
பதமலரை யிதயமலர் பதித்து வைப்பாம். (24)

வள்ளிநாயகியம்மை

மணிகொண்ட மானிடத்து முளைத்து வேடர்
மனைபதிந்து பசுந்தழையாய் மருவுஞ் சோதி
அணிகொண்டு தழைந் தருளிக் கொழுகொம்பாக
வமலர்புயந் தழுவி வெள்ளி யசலமேறிக்
கணிகொண்ட புகழ் பூத்தெம் வினையைக் காய்த்துக்
கவின்பழுத்துக் கண்டவர்க்குக் கருணை யூற்றிப்
பணிகொண்ட வள்ளியென்னுங் கொடியெம் முள்ளப்
பங்கயத்தைச் சுற்றியிடப் பதித்து வாழ்வாம். (25)

வீரவாகுதேவர்

பொங்குகிரி களிற்றலைமை யோதும்போது
பொற்புடைய பொற்கிரிமுன் னிற்குமாபோல்
தங்குதிறற் புகழ்வீரர் தம்மையெண்ணில்
தானேமுன் னெண்ணவருந் தலைமையாளன்
பங்கமிலா நீடுலகை மூடுமல்லின்
பகைவனவன் பகைவனவன் பகைவனானோன்
மங்கலிலாப் புகழ்வீர வாகுவாய
வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல் செய்வாம்.

அரிகரபுத்திரர் (ஐயனார்)

பையராவமளியானும்பரம்பொருண்முதலுநல்கும்
ஐயனேயோலம்விண்ணோர்க்காதியேயோலஞ்செண்டார்
கையனேயோலமெங்கள்கடவுளேயோலமெய்யர்
மெய்யனேயோலந்தொல்சீர்வீரனேயோலமோலம். (27)

ஆரணச்சுருதியோர்சாரடலுருத்திரனென்றேத்துங்
காரணக்கடவுளோலங்கடனிறத்தெந்தாயோலம்
பூரணைக்கிறைவாவோலம்புட்கலைகணவாவோலம்
வாரணத்திறைமேற்கொண்டுவரும்பிரானோலமென்றாள்.

சிவசத்தி

செறிதருமுயிர்தொறுந்திகழ்ந்துமன்னிய
மறுவறுமரனிடமரபின்மேவியே
அறுவகைநெறிகளும்பிறவுமாக்கிய
இறைவிதன்மலரடியிறைஞ்சியேத்துவாம். (29)

சிவகாமியம்மை

பரந்தெழுந்தசமண்முதலாம்பரசமயவிருணீங்கச்
சிரந்தழுவுசைவநெறித்திருநீற்றினொளிவிளங்க [பால்
அரந்தைகெடப்புகலியர்கோனமுதுசெயத்திருமுலைப்
சுரந்தளித்தசிவகாமசுந்தரிபூங்கழல்போற்றி. (30)

ஆடகசிதம்பரவணங்குமையணங்கிலா
நாடகனனந்தசுகனன்குபுணைபங்கினள்
ஏடகமணம்பொருவவெங்கணுமியைந்துளாள்
பாடகமிலங்குசிறுபங்கையமிறைஞ்சுவாம். (31)

துர்க்கை

ஓரெட்டிதழ்வட்டத்துள்ளாயசட்கோணம்
பாரித்தமுக்கோணவட்டப்பராபரையே
வாரிப்படுநஞ்சமுதாக்கும்வால்வளைக்கை
வேரிக்கரும்பேவித்தின்றிவிளைமூலமே. (32)

ஆதியாயந்தத்தினந்தமாய்நின்றேற்குப்
பாதியாய்யொன்றாய்ப்பலவாகிப்பல்லுயிராய்ப்
பேதியாநின்றாய்பெருமாட்டிநின்பெருமை
சோதியாநின்றார்க்கெளிதன்றேதுல்லவமே. (33)

தோன்றுசராசரங்களெல்லாந்தொடர்விடா
தேன்றசிவமயமுநின்னன்றியில்லையால்
ஆன்றவிருப்பினருந்துவனவின்றாமேல்
ஊன்றுசுவையுளவோநந்தாவொளிவிளக்கே. (34)

பேதாதிபேதம்பிறந்தவுயிர்த்தொகைக்கோர்
ஆதாரமாகியளவையறிந்தளித்தாய்
ஓதாமறைநூலுபநிடதத்துண்மயமாம்
பாதாரவிந்தம்பெறப்பெற்றேன்பாதகனே. (35)

காளிதேவி

அந்தரியா மலையமலை யாலகாலி யம்பிகைமா தரிகௌரி யாளியூர்தி, வந்தரிநான் முகன்வணங்கும் மலர்த்தாட்சூரி வைரவிதா ருகவைரி மதங்கிநீல, சுந்தரியோ கினிசூலி நீலிநாக கங்கணிசங் கரிவிமலை காளிவால, சுந்தரிசா முண்டிதிரி சூலி கோலத் துணையடியென் முடிமீது சூட்டினேனே. (36)

இலக்குமி

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
றனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு
ளவதரித்தோ யன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
யெனவணக்கஞ் செய்வான் மன்னோ. (37)

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கமுலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா. (38)

சரசுவதி

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம். (39)

திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். (40)

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பரசமய கோளரியைப் பாலரு
வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிவபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெலாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர்தங் குலதீ பத்தை
வீரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம். (41)

### திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப் பேரன்பு மழைவாரு
மிணைவிழியு முழவாரத் திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம். (42)

### சுந்தரமூர்த்தி நாயனார்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமா
ளெமதுகுல தெய்வ மாமால். (43)

## மாணிக்கவாசக சுவாமிகள்

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி. (44)

## நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்தபுகலியர்கோன் கழல்போற்
ஆழிமிசைக்கன் மிதப்பிலணைந்தபிரானடிபோற்றி [றி
வாழிதிருநாவலூர்வன் றொண்டர்பதம்போற்றி
ஊழிமலிதிருவாதவூரர்திருத்தாள்போற்றி. (45)

## திருத்தொண்டர்கள்

அண்டருநான் முகத்தயனும்யாவரும்
கண்டிடவரியதோர்காட்சிக்கண்ணவா
யெண்டகுசிவனடியெய்திவாழ்திருத்
தொண்டர்தம்பதமலர்தொழுதுபோற்றுவாம். (46)

## சூர்யமூர்த்தி

விளங்குதண்டிமுதலோராற்சேவிக்கப்படுவோன்
விமலன்முதனுற்சிங்கபதாசனத்தின்மேலோன்
களங்கமிலாத்தீத்தைமுதற்சத்திகணசகிதன்
கருதருணமணியொளியன்கடோற்கான்மமூர்த்தி
துளங்கலில்தன்னங்கந்தன்னங்கமெனுங்கிரகன்
தொகுமுடுவாதியசூழச்சுவேதகஞ்சத்திவர்ந்தோன்
வளங்கொள்சுவேதாம்புசத்தோட்கானிருநல்விழியோன்
வருசிவசூரியன்காக்கமகிழ்ந்தடியேங்களையே. (47)

சண்டேசுரர்

மனுதிகளுக்கெட்டாதபரமானந்தவாழ்வினை
அங்கோரிலிங்கமணலாற்கூப்பித்
தனுதிதயந்தனினின்றுந்தாபித்தான்பால்
தழைத்தவன்பாலாட்டவந்துதடுக்கத்தாதை
எனுதவன்றனிருபதமுமழுவாற்றுண்டித்
திகழ்ந்தவனைப்பரபதத்துளிருத்தித்தானும்
பினுகியருளடைந்தவிறற்சண்டேசன்றாள்
பிரசமலரிறைத்திறைஞ்சிப்பரசுவாமே. (48)

திருச்சிற்றம்பலம்

---

## பட்டினத்தடிகள் திருப்பாடல்

திருச்சிற்றம்பலம்

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லந்
துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளும்
இல்லாளுஞ்சுற்றமுமைந்தருப்வாழ்வுமெழிலுடம்பும்
எல்லாம்வெளிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. (2)

பொல்லாதவனெறிநில்லாதவனைம்புலன்கடமை
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பாற்
செல்லாதவன்உண்மைசொல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே (3)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைபிறந்துமண்மேல்
இறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்

குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியே கம்பனே. (4)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே. (5)

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சியே கம்பனே. (6)

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரஞ் செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சியே கம்பனே. (7)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங் கொடார்குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னும நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சியே கம்பனே. (8)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே. (9)

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியில்
உன்னை நினைந்திங் குனைப்பூசியாத வுலுத்த ரெல்லாம்
என்னை யிருந்து கண்டா யிறைவா கச்சியேகம்பனே. (10)

கொன்றே னநேக வுயிரையெல்லாம் பின்பு கொன்றுகொன்று
தின்றேன தன்றியுந் தீங்குசெய்தே னதுதீர்க வென்றே
நின்றேனின் சன்னிதிக் கேயதனுற் குற்ற நீபொறுப்பா
யென்றே யுனைநம்பினே னிறைவா கச்சியே கம்பனே. (11)

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் ரோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. (12)

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடக சாலையெங்கேயிது கண்மயக்கே. (13)

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. (14)

தாயும்பகை கொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும்பகை யுறவோரும் பகையிச் செகமும் பகை
யாயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினுற்
ரேயு நெஞ்சே மருதீசர்பொற் பாதஞ் சுதந்திரமே. (15)

வாளான் மகவரிந் தூட்டவல்லே னல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லே னல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லே னல்லன் நானினிச்சென்
ருளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே. (16)

மந்திக் குருளை யொத்தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யானென் செய்வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போல்
எந்தைக் குரியவன் காணத்தனே கயிலாயத்தனே. (17)

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலமேல் வைத்தழு மைந்தருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே. (18)

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமுங் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. (19)

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரே யென்னு யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. (20)

திருச்சிற்றம்பலம்

---

# கந்தரலங்காரம்

திருச்சிற்றம்பலம்

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே. (1)

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பா
லெழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே. (2)

தேனென்று பாகென் றுவமிக்கொணு மொழித் தெய்வவள்ளி
கோனன்றெனக்குபதேசித்ததொன் றுண்டுகூறவற்றே
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே, (3)

பாலென பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற் றமயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே. (4)

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே. (5)

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே. (6)

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே, (7)

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த வன்பாற்
குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டு மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே, (8)

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே. (9)

கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. (10)

திருச்சிற்றம்பலம்

— ——

# கந்தரனுபூதி

திருச்சிற்றம்பலம்

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம். (1)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. (2)

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபாவி வெளிப் படினே. (3)

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. (4)

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (5)

மாவேழ் சனனங் கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. (6)

திருச்சிற்றம்பலம்

# திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே. (1)

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவு மடியாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்

சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிது வனமேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியுர் வாழ்பொற் பெருமாளே. (2)

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு
துளத்து னன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினின் வருவாயே
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே
தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ மகிழ்வோனே
தெனத் தெனந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பெருகுயர் பொழில் திகழ்
திருப் பரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே. (3)

தொந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய முதுகே வளையஇதழ்
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டுகிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி
வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி
மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்
எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர் வருக அபிராம
இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டிடவருக
என்றுபரிவி னுடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தைமகிழு மருகா குறவரிள
வஞ்சிமருவு மழகா அமரர்சிறை
சிந்தஅசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
செந்திநகரி லினிதே மருவிவளர் பெருமாளே. (4)

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்

அவமாயை கொண்டுலகில் விருதாஅ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுபரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே. ()

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டும்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிதுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மநுதினமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே. (6)

உடுக்கத் துகில்வேணு நீள்பசி
யவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனலாடை வேணுமெய் யுறுநோயை
ஒழிக்கப் பரிகாரம் வேணுமுள்
இருக்கச் சிறுநாரி வேணுமொர்
படுக்கத் தனிவீடு வேணுமிவ் வகையாவுங்
கிடைத்துக் க்ருஹ வாசியாகி
மடக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால னுயுயி ரவமேபோம்
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மேழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ தொருநாளே
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சில தூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக வெனமேவிக்
குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ
அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே. (7)

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே

கதிரகாம வெற்பில் உறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே. (8)

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைகள் ஆதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ
நாலுமுக னாதியரி யோமெனஅ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா
ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவெ
ஓதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

திருச்சிற்றம்பலம்

அடியார்விமலத் திருவகத்து ளன்புபொறுமை யவாவறுத்தல்
அடுப்பாங் கமைத்து மலக்காட்டத் ததிகஞானக் கனல்மூட்டி
மடியாதிருந்த உயிர்க்கலசம் வழியஅருட்பே ருலைவார்த்து
மாருக்கருணைச் சிவானந்த மதுரச்சோறு தினம்பொங்கி
விடியாச்சீவ போதவிருள் வீயமௌனச் சுடர்விளக்கு
விளக்கியிருந்த படியிருந்து மேலாஞ் சிற்றில்விளையாடும்
செடிதீர் மனத்தோர் புகழ்வாலைசிறுவா! சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப் போரூரா! சிறியேஞ்சிற்றில் சிதையேலே.

திருச்சிற்றம்பலம்

---

## திருமுருகாற்றுப்படை வெண்பா

திருச்சிற்றம்பலம்

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையா யென் னுள்ளத் துறை. (1)

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். (2)

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. (3)

இன்னமொருகா லெனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். (4)

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. (5)

அஞ்சு முகந்தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகா னினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன் (6)

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். (7)

*காக்கக் கடவியநீ காவா தொழிந்தக்கால்
ஆர்க்குப் பாமா மறுமுகவா—பூக்குங்
கடப்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்கா ணிரங்கா யினி. (8

திருச்சிற்றம்பலம்

* இவ்வெண்பா சிலபிரதிகளில் மாத்திங் காணப்படுகிறது.

—

# தாயுமானசுவாமிகள் திருப்பாடல்

திருச்சிற்றம்பலம்

அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க்குயி ராய்த்
தழைத்ததெது மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்கு வாம். (1)

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலமமு தாக விலையோ
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ
அந்தரத் தகில கோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளைய விலையோ
சத்தமே கங்களும் வச்ரதர னாணையிற்
சஞ்சரித் திடவில் லையோ

வாழாது வாழாவே யிராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவி லையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்க விலையோ
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக் கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந் தமே. (௨)

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
அன்பினு லுருகி விழிநீர்
ஆருக வாராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திடவ ணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள் வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழு தருகில் வீற்றிருப்பச்
சொல்லரியநெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபானு பூதி காட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
சின்ம யானந்த குருவே. (௩)

மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல் பூட்டும்
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்க மென்றும்

பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றியிப்
பொய்வேட மிதநி காட்டிப்
பொறையறிவு துறவீ தல்ஆதிநற் குணமெலாம்
போக்கிலே போக விட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகா யதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவானு பூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டபின்
வாழ்வித்த ஞான குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே. (4)

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்கவெனில்
நாணும்என் உளம் நிற்றிநீ
நான்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால்
நான்பூசை செய்யல் முறையோ
விண்ணேவி ணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந் தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேய வித்தின் முளையே
கண்ணே கருத்தேய யெண்ணே யெழுத்தே
கதிக்கான மோன வடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணை கரக்க டவுளே. (5)

எண்ணரிய பிறவிதனின் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகி லேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தில் நின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவச முறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்த தேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவிதன் அருளி னலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவே னுனதடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (6)

சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே. (7)

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே அவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே அடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு

நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
நேயத்திலேயு னிருதாள்
மட்டிலே மனதுசெல நினதருளும் அருள்வையோ
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே. (8)

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே. (9)

அப்பாஎன் எய்ப்பில்வைப்பே ஆற்றுகிலேன் போற்றியென்று
செப்புவதல்லால் வேறென் செய்வேன் பராபரமே. (10)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே. (11)

நீர்பூத்த வேணி நிலவெறிப்ப மன்றாடுங்
கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ. (12)

ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடி வாம்அடியைப் போற்றுநாள் எந்நாளோ. (13)

அஞ்சுமுகங் காட்டாமல் ஆறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ. (14)

திருச்சிற்றம்பலம்

---

## நால்வர் செய்த அற்புதங்கள்

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவைய தாகுமே
சினஅரா விடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

திருநாவுக்கரசு சுவாமிகள்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழலில் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கூர்அரா விடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லு மிதக்கு மே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாட லே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்கு மே
வெள்ளை வாரண மீதில் இருத்து மே
மங்கை பாகரைத் தூது நடத்து மே
மருவி ஆறு வழிவிட்டு நிற்கு மே
செங்கல்லானது தங்கம தாகு மே
திகழு மாற்றிட்ட செம்பொன் னளிக்கு மே
துங்க வாம்பரி சேரற்கு நல்கு மே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாட லே.

மாணிக்கவாசக சுவாமிகள்

பெருகும் வைகை தனைஅழைப் பிக்கு மே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்று மே
நரியெ லாம்பரி யாக நடத்து மே
நாடி மூகை தனைப்பேசு விக்கு மே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்கு மே
பரமன் ஏடெழு தக்கோவை பாடு மே
வருகும் புத்தரை வாதினில் வெல்லு மே
வாத வூரர் வழங்கிய பாட லே.

திருச்சிற்றம்பலம்

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு
முற்றிற்று.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
திருவல்லுரை